RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s22214

OPEN ACCESS

# கிருஷ்ணகிரி மாவட்டம் கொல்லப்பள்ளி வனதேவதை அய்யனார் கோயில் வழிபாடு

**கி. மல்லிகா [அ, *], இரா. ஜெயந்தி [அ]**

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ விஜய் வித்யாலயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நல்லம்பள்ளி- 636807, தமிழ்நாடு, இந்தியா

# Worship of the Forest Goddess in the Life of Irulas- Study

**G. Malliga [a, *], R. Jayanthi [a]**

[a] Department of Tamil, Sri Vijay Vidyalaya College of Arts and Science, Nallampalli-636807, Tamil Nadu, India

* Corresponding Author: malligakumar1122@gmail.com

Received: 26.09.2022
Revised: 06-11-2022
Accepted: 11-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

A relentless mixture of socially conscious human ethnic groups is spreading across human circles. The number of human hybrid groups has increased over the past thousand years as a result of the hybrid system, which began in the Pre-Paleolithic and became more and more widespread. It is clear that Kumari Kandam (a mythical continent believed to have been lost with an ancient Tamil civilization) is the land where a single organism multiplied into various beings and developed into human beings, and that the upright ape that emerged from that land was the beginning of the development of the human race. It can also be well understood that the Dravidian race is the hallmark of that early development of the race. In that order, the Tamil tribal tribes are the Irulas. The Coimbatore district has a large population of tribal people. These illiterate people belong to a generation that lived for about a thousand years. In the social life of the tribal people, from the time of the beginning of religious worship to the present day, the worship of the Goddess of the Forest occupies a special place. The purpose of this article is to examine those methods of worship.

**Keywords:** Tribal People, Coimbatore, Worship, Human Race

## முன்னுரை

ஒரு சமூக உணர்வுடைய மாந்த இனக்குழுக்களின் இடையறாத கலப்புமனித இனவட்டங்களில் பரவிய வண்ணம் இருக்கிறது. முன்தொன்மைக் கற்காலத்தில் தொடங்கி மேன்மேலும் பரவல் அடைந்த கலப்பு முறையின் விளைவாக ஆயிரம் ஆண்டுகளில் மனிதக் கலப்பின குழுக்களின் எண்ணிக்கை மிகுந்துள்ளன. ஒரு பெரிய இனத்தின் பெறுங்குழுக்கள்இயற்கைக் காப்பு அரணுக்கு உட்பட்டிருந்தாலன்றி பாதுகாப்பாக நீண்ட காலம் இருக்க இயலாது, என "மாந்த இனங்கள்" என்னும் நூலை [(1)] எழுதிய 'மீ. நெசு தூர் சா' என்னும். சோவியத் மானுட நூல் அறிஞர் விளக்குகிறார்.

இவர்களின் கூற்றுப்படி ஒருயிர் பல்வேறுஉயிர்களாகப் பல்கிப்பெருகிமனிதனாக வளர்ச்சி அடைந்த நிலமேகுமரிக்கண்டம் என்பதையும், அந்நிலத்தில் இருந்து தோன்றிய நிமிர்ந்த குரங்கு, மனித இனத்தின் வளர்ச்சியின் தொடக்கமே என்பது தெளிவாகிறது. அந்தத் தொடக்க இன வளர்ச்சியின் அடையாளமே திராவிட இனம் என்பதையும் நன்கு உணரலாம்.

அந்த வரிசையில் தமிழ் தொல் பழங்குடியினர் இருளர். ஆவார். பழங்குடி இனத்தைச் சேர்ந்த மக்கள் கோவை மாவட்டத்தில் அதிகம் உள்ளனர் கல்வியறிவில்லாத இந்த மக்கள்சுமார் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்த தலைமுறையைக் கொண்டவர்கள். அப் பழங்குடி மக்களின் சமூக வாழ்க்கையில் சமய வழிபாடுகள் தொடங்கிய காலம் முதல் இன்று வரை "வனதேவதை வழிபாடு" சிறப்பிடம் பெறுகிறது. அவ்வழிபாட்டு முறைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## குறிஞ்சி நில மக்கள்

மலையும் மலை சார்ந்த இடங்களும் குறிஞ்சி நிலம் என்பர். குறிஞ்சி என்ற மலர் மலைப் பகுதிகளில் பூத்துக் குலுங்கும் அழகைக் கருத்தில்கொண்டு அந்நிலத்துக்குக் குறிஞ்சி என்று பெயரிட்டனர். குறு என்ற சொல் சிறிய, குள்ளமான என்ற பொருளைத்தரும் சிறிய அளவிலான அந்தப் பூ குறுஞ்சி - குறிஞ்சி எனப்பட்டது. என கிருஷ்ணன் தன் நூலில் சுட்டுகிறார்.

"கருங்கோள் குறிஞ்சிப் பூக்கொண்டு" என்ற குறுந்தொகைப் பாடல் அதை உணர்த்துகிறது அரங்கசாமி.இரா., தொல்பழங்குடி மக்கள் (Swaminathaiyar, 2020).

குறிஞ்சி நிலத்திலேயே மனித இனம் தோன்றியது என்பர். குறிஞ்சியில், வளர்ந்த கனிகள், தேன், கிழங்குகள் போன்றவை, இயற்கை தந்த உணவாயின. வேட்டையாடி விலங்குகளை உண்ணும் வித்தையையும் மனிதன் கற்றுக் கொண்டான். கற்கத்தி, கற்கோடாரி, கற்றுளி போன்றவை மனிதனுக்குஆயுதமாயின. நெருப்பின் பயனைஇயற்கையிடமிருந்தேமனிதன் அறிந்தான். அதனைத் தான் விரும்பிய நேரத்தில் உருவாக்க முயன்று வெற்றி பெற்றதே மனிதனின் முதல் அறிவியல் கண்டுபிடிப்பு எனலாம்.

குறிஞ்சி நிலத்தார்கானவர், குறவர், புனவர் என அழைப்பர். மகளிரை கொடிச்சியர் என அழைப்பர். குறிஞ்சி நிலத்தலைவன் நாடன் எனப்பட்டான். நாளும் வேட்டையாடுவன், வேடன் எனப்பட்டான். இம் மக்களே உலகின் முதல் மக்கள் ஆவர். மேற்குறிப்பிட்ட பழக்கவழக்கங்கள் அனைத்தும் இருளர் இனமக்களுடைய தொடர்ச்சியாக இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## இருளர்களின் முன்னோர்கள்

மலைகள் இல்லாத நாடுகள் கூட இருக்கலாம். எதிர்காலத்தில் அந்நாட்டில்கூட மலைகள் தோன்றலாம். இமயமலையும் அவ்வாறு தோன்றியதே. குமரிக்கண்டத்தில் குமரி என்ற பெயரிலேயே பெரும் மலைத்தொடர் இருந்ததாகக் கூறுவர். இன்றைய செயற்கை நிழற்படத்தில் அராபியக் கடல் நடுவே தோன்றிய தடிப்பான கோடு ஒன்று தென்முனை வரை வடமேற்கு தென்கிழக்காக நீண்டு செல்கிறது. இதனைக் கடலுள் மாய்ந்த மலைத்தொடர் என்கின்றனர் குமரிக்கண்டத்தில் இருந்த குமரி மலையும், மேரு மலையும் மிக நீண்ட மலைத்தொடராகும். இம் மக்களின் வழி வந்தவர்களேஇருளர் இனம் என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

## பண்பாட்டுச் சின்னம்

மக்களது அறிவு நலம் கருத்து நலம் உடல் நலம் கொள்கை நலம் நலம் வாழ்கை நலம் முதலிய மேன்மேலும் திருந்தி வாழும் நிலையே பண்பாடு விருந்தோம்பல் பழமையைப் போற்றும் பண்பு போன்றவைகள். தமிழரின் பண்பாடாக இதனையே பாரதியார் மனித சமுதாயத்தில் வளர்ச்சியின் வேர்கள் பழமையில் ஆழ்ந்து பதிந்து இருக்கின்றன என்கிறார். ஒரு சமுதாயத்தின் நிகழ்காலமும் எதிர்காலமும் ஒரு மரத்தின் தளிரும்., மலரும் கனியும் போன்றது. அதன் பழமை, மரத்தின் வேர் போன்றது. வளமும் வாழ்வும் வேரின்றி அமைவது இல்லை எனவேதான் பழமை எந்த சமுதாயத்திலும் ஒரு மாபெரும் ஆற்றலாக விளங்குகின்றது.

## இருளர் இன வழக்காறுகள்

தொழில் மற்றும் ஏனைய சமூகப் பண்பாட்டுச் செயல்பாடுகள் என்னும் இரு பெரும் தளங்களில் இயங்கும் இருளர்கள் தத்தம் சூழலுக்கு ஏற்ப பல்வேறு வாய்மொழி வழக்காற்று வடிவங்களைப் படைத்து வழங்குகின்றனர். பொதுவாக வாய்மொழி வழக்காறுகள் எனக் கூறும்போது உரை நடையாகவும் பாடல் வடிவத்திலும் வழங்கும் வழக்காறுகள் வகைக்குள் அடங்கும். உரைநடையில் வழக்காற்று வடிவங்களான பழமொழி, விடுகதை நகைச்சுவை போன்றவையும் விவரிப்புத் தன்மையுடைய உரைநடைக் கதைகள் போன்றவைகளும் அடங்கும்

வாய்மொழி வழக்காற்றில் அடங்கும் மற்றொரு வகைமைபாடலாகும். அது அடிப்படையில் சொற்களின் கட்டுமானத்துடன் இசையையும் உடைத்துக் கொண்டு இயங்கும் தன்மையது. பாட்டு என்னும் இவ்வகைமைக்குள் பல்வேறுசூழல்களில் இயங்கும் சிறிய பாடல் வகைகளில் இருந்து நீண்ட கதைப்பாடல்கள் வரையிலான பல்வேறு வடிவங்கள் அடங்கும்

சடங்கியல் சூழல்களில். உடுக்கடித்து மாரியம்மன், காத்தவராயன், ஏழு கன்னிமார் முதலிய தெய்வங்களைப் பாடும் பாடகர்களையும், குடும்ப நிகழ்ச்சிகளில் கோவலன் கண்ணகி கதை, நல்லதங்காள் கதை முதலியவற்றைப் பாடும் பாடகர்களையும் இச்சமூகத்தில் காணலாம்.

இருளர் இன மக்கள் ஏனைய சமூக மக்களைப் போலவே தமது அன்றாடப் பேச்சு அல்லது உரையாடல் என்னும் மனிதத் தகவல் தொடர்பில் பழமொழி, புதிர், நகைச்சுவை நகையைப்போன்ற நிலைத்த தொடர் வழக்காற்று வடிவங்களைப் பயன்படுத்துகின்றனர்என தனஞ்செயன் குறிப்பிடுகிறார்.

## குலக்குறி

'குலக்குறி இயல்' என்பது மனித சமூகத்திற்கும், இயற்கை பொருட்களான தாவர இனம், விலங்கினம், மழை, நிலவு, சூரியன் முதலிய வானியற் பொருட்கள் மற்றும் பருப்பொருட்கள் ஆகியவற்றுக்கும் இடையே நிலவும் உறவைக் குறிப்பதாகும். ஒவ்வொரு இனத்திற்கும் ஒரு அடையாளமாக இந்தக் குலக்குறி பின்பற்றப்படுகிறது. [(5)] குலக்குறியியல் சமயத்தின் தொடக்கநிலை வடிவம் என்றும், அது ஒரு சமூக சமய ஒழுங்கமைப்பு என்றும், சமூகக் குழுவின் கூட்டு அடையாளச் சின்னம் என்றும், இயற்கையுடனான சடங்கியல் உறவு என்றும் பல்வேறு கோணங்களில் சமூகவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். அந்த வகையில் இருளர் பழங்குடி வகையினரின் வழிபாட்டில் இடம்பெற்ற, "வனதேவதை வழிபாடு "இன்றும்அவ்வினத்தின்குலக் குறியாகத் திகழ்கின்றன என்பதில் ஐயமில்லை.

## இருளர் வாழ்க்கை

பழங்குடி இருளர்களின் குலமரமபும் வாழ்வியலும் பற்றி அறிந்து கொள்வதற்குத் தமிழ்ச் சமூக வரலாற்றை அறிய வேண்டி இருக்கிறது. ஒரு சமூக மக்களாக இருந்தாலும், வாழ்க்கை முறைகளைத் தெரிந்து கொள்வதில் அவர்களுக்குள்ளிருக்கும் குல முறைகள் முக்கியப்பங்கு வகிக்கின்றன. பழங்குடி இருளர் குலங்கள் பற்றியும், சமூகக் கலாச்சார மதிப்பீடுகளுக்கும் உள்ள தொடர்பு பற்றியும் தெரிந்து கொள்வது இன்றைய அரசியல் பின்னணியில் அத்தியாவசியமானதாகும். இப்பழங்குடி மக்களான இருளர், நீலகிரி இருளர், நீலகிரி, ஆனைமலை, மருதமலை, சிறுவாணி, மேட்டுப்பாளையம், சமவெளி இருளர், காஞ்சிபுரம் வேலூர், செங்கல்பட்டு, சேலம், தர்மபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களில்பரவலாக வசிக்கின்றனர்.

## இருளர்சமூகம்

இருளர் இன ஆண்கள், பெண்களின் வார்த்தையை எதிர்பார்த்தே செயல்படுகின்றனர். வேட்டைக்கு ஆணும் பெண்ணும் சேர்ந்தே செல்கின்றனர். இருளர் இனப் பண்பாட்டில், ஆணும் பெண்ணும் எங்கும் இணைந்தே செல்கின்ற வழக்கம் உடையவர்கள் என்பது குறிப்பிடதக்கது. வேட்டையில் பெண்கள்,

ஆண்களை வழி நடத்திச் செல்கின்றனர். இவர்களின் ஒட்டுமொத்த சமுதாய குல தெய்வமாகிய "கன்னியம்மா தெய்வம்" தான், தினமும் வேட்டையின்போது வழிகாட்டி வருவதாக நம்பிக்கை கொண்டு வணங்குகிறார்கள்.

## இருளர் வாழ்வில் வனதேவதை

தொல்குடி மக்கள் இருளர் வாழ்க்கையில், வனதேவதை என்ற ஒரு சிறந்த அம்சம் இப்பொழுதும் இருந்து வருகிறது. மலைகளிலும் காடுகளிலும் குகைகளிலும் வாழ்ந்து வந்து தனது பாரம்பரியத்தைக் காத்து வந்த இருளர் இன மக்கள், கிருஷ்ணகிரி ஆந்திர மாநில எல்லையோர மலை கிராமத்தில் வனதேவதைத் திருவிழாவைக் கோலாகலமாக இன்றும். கொண்டாடுகிறார்கள்.

பக்தர்கள் பச்சை நிற ஆடை அணிந்து வழிபாடு நடத்துகிறார்கள் கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர், அருகே, கொல்லப்பள்ளி, வனப்பகுதி ஆந்திர மாநில எல்லையோரம் உள்ள இந்த மலையில், வனதேவதை அய்யனார் கோயில் அமைந்துள்ளது. அங்கு பழங்குடியினத்தைச் சேர்ந்த இருளர் மக்கள் அதிகம் வசிக்கின்றனர். அவர்கள் தங்களுடைய காவல் தெய்வமாக வன தேவதையை வழிபடுகின்றனர். இந்தக் கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் வைகாசி பச்சை நிற ஆடை அணிந்து மாலை அணிந்தவர்கள் இரவில் கோயிலில் இரவில் தங்கி விரதத்தை முடிப்பார்கள்.

## வன தேவதையை வழிபடும் முறை

"தொல்குடி மக்கள் வேட்டை மற்றும் உணவு சேகரிப்பை அடிப்படையாகக் கொண்டிருக்கும் வாழ்க்கையை மேற்கொண்டனர். மக்களிடையே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விலங்குகள் தாவரங்கள் இயற்கை நிகழ்வுகள் ஆகியவை நடைமுறை வழக்கங்களையும் புராணங்களிலும் புனிதமானவையாக அணுகப்படுகின்றன. அந்தப் பொருட்கள் நாளடைவில் சடங்கியல் அணுகுமுறைக்குரிய பொருட்களாக் கப்படுகின்றன. மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான இந்த சடங்கியல் உறவு, அடிப்படையில் தொல் வரலாற்றுப் பின்புலத்தைச் சுட்டிக்காட்டுகின்றன. தனித்தன்மையோடு ஒன்றோடு ஒன்று வேறுபடுத்தி அடையாளம் ஆக்கப்பட்டு வகைப்படுத்தப்படும் பொழுது அங்கு தான் ஒருவகை கொள்கை செயல்படத் தொடங்குகிறது"[7] என தனஞ்செயன் தன்நூலில்சுட்டுகிறார். இதனடிப்படையில் தொல்குடி மக்களுடைய வனதேவதை வழிபாட்டு முறைகள் பின்பற்றப்படுகின்றன.

காட்டுப் பகுதியில் இயற்கையோடு இயற்கையாக வாழும் இருளர் பழங்குடியினர் தங்களது வனதேவதை அம்மனுக்கு விசேஷ பூசைகள் செய்வது வழக்கம். தேன், கிழங்கு, மற்றும் பூக்களை இருளர் இன மக்கள் சேகரிப்பார்கள். கிழங்கின் மூலம் செய்யப்பட்ட விளக்கை, பெண்கள் ஊர்வலமாக எடுத்துச் சென்று, வனதேவதையைப் பூக்களால் அலங்காரம் செய்து தீபம் ஏற்றி வழிபடுவர். 20க்கும் மேற்பட்ட ஆடுகள், நூற்றுக்கும் மேற்பட்ட நாட்டுக் கோழிகள் பலியிடப்பட்டுவிருந்து சமைத்து அனைவரும் கூட்டமாக உட்கார்ந்து உண்பர்.

இருளர் இன மக்கள் தன்னுடைய பாரம்பரிய இசையுடன் நடனமாடி திருவிழாவைக் கொண்டாடி மகிழ்வர். கிருஷ்ணகிரி, வேலூர், திருவண்ணாமலை, பொள்ளாச்சி, நீலகிரி மற்றும் கோவை மாவட்டங்களில் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட இருளர் இன மக்கள் இன்றும் கலந்து கொண்டு, கங்கையில் கரகத்தை விடும் நிகழ்ச்சி இன்றும் கோலாகலமாக நடந்தேறுகிறது என அகத்தியலிங்கம் சுட்டிக்காட்டுகிறார்.

## முடிவுரை

இக்கட்டுரை கல்வெட்டுக்கள் தொல்பொருள்கள் பழந்தமிழ் இலக்கியச் சான்றுகளை கருத்தில்கொண்டு பண்டைய தமிழ்ச் சமூகத்தின் அமைப்பு, நம்பிக்கைகள், பொருளியல் வாழ்வு, வழிபாடு போன்றவைகளைத் தக்கசான்றுகளுடன் நிறுவியுள்ளன. மானிடவியல் கோட்பாட்டின் படி

நம்பிக்கைகளே வழிபாட்டிற்கு ஆதாரமானவை எனக் கொள்ளலாம். மேலும் குலக்குறி வழிபாடு, குலதெய்வமான வனதேவதை வழிபாடு போன்றவைகள் பழங்குடி மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ளன என்பதையும் அறியலாம். தமிழகத்திலுள்ள தொல்குடி மக்களுடைய வாழ்க்கைச் சிறப்புகளை இதன் மூலம் அறிந்து கொள்கிறோம்.

## References

Swaminathaiyar, U.V (2020) Kurunthogai Moolamum Uraiyum, Ue.Ve.Sa Noolagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License